## In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No.25/2013 தேதி-10.04.2026
(DW.1) – ஜாண் கில்பர்ட்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1. இந்த வழக்கின் பிரதிவாதி என்னுடைய சகோதரர் என்றால் சரிதான். என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 வரையுள்ள ஆவணங்கள் அசல் வழக்கு எண்.123/2003 மற்றும் 142/2007 ஆகி ய வழக்குகளில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மற்றும் மேல்முறையீடு வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.123/2003, நானும், மற்ற சகோதரர்களும் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான்.

2. அசல் வழக்கு எண்.142/2007 ல் இந்த வழக்கின் பிரதிவாதி ஜோ ஸ்டீபன் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். இவ்வழக்கும், மேற்சொன்ன வழக்கும் பாகப்பிரிவினை ஆவண எண்.1167/1997 இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். மேற்சொன்ன பாகப்பத்திரத்தை என் தரப்பில் இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ.6 ஆவணமான வாதி தன் தரப்பில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன பாகப்பிரிவினை ஆவணமானது, நானும், மற்ற சகோதரர்களும் சேர்ந்து பேசி தான் பாகப்பத்திரத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரிதான், ஆனால் பாகப்பத்திரத்தை தயார் செய்தது இவ்வழக்கின் வாதியான ஜோ ஸ்டீபன் ஆவார். பாகப்பத்திர ஆவணத்தில் 7 ஆம் இனச்சொத்து கிணறு, 8 ஆம் இனச்சொத்து கிணற்றிற்கு சென்று வர ஒதுக்கப்பட்ட பொது பாதை, 9 இனச் சொத்து 7 மற்றும் 8 இனச்சொத்தில் பிரிக்கப்பட்டு மழைநீர் செல்வதற்காக அமைக்கப்பட்ட ஓடை ஆகும்.

4. மேற்சொன்ன இரண்டு வழக்குகளிலும் 7, 8 மற்றும் 9 இனச் சொத்தின் ஆக்கிரமிப்போ, தடங்கலோ செய்யக் கூடாது என்று பரிகாரம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு வழக்குகளும்

மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளைக்கு மேல்முறையீட்டிற்கு சென்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். வாதி இந்த வழக்கில் எல்கை நிர்ணயம் செய்ய வேண்டும் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

5. இந்த வழக்கு சொத்து பாகப்பிரிவினை பத்திரத்தின் படி 4 வது கண்டம் என்றால் சரிதான். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.6 ஆவணமான பாகப்பத்திரத்தில் 4 வது கட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணமானது இரணியல், சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வரைபடத்தில் கீழ் உள்ள பகுதியில் 4 வது கட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதியான ஜோ ஸ்டீபன் 5 வது கட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வரைபடத்தின் படி 4 வது கண்ட சொத்து வாதியான ஜோ ஸ்டீபனுக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். சொத்தின் ரீ சர்வே எண்.207/10 என்றால் சரிதான். 4 வது கண்டத்தின் அளவு 13.400 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் 9 வது கண்டமும் அதோடு சேர்க்கப்பட்டுள்ளது.

7. 9 வது கண்டம் 316 சதுர லிங்ஸ் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது 4 வது கண்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டுள்ளது. 4 வது கண்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டதாக வரைபடத்திலோ, ஆவணத்திலோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி எனக்கு 13 சென்ட் சொத்து உரிமைப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் கிழக்கு பக்கம் திக்கணங்கோடு, முளகுமூடு செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான்.

8. 4 வது கண்டத்தின் வடக்கு பக்கமாக என்னுடைய 5 வது கண்டம் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு வழக்குகளில் கோரப்பட்ட பரிகாரத்திற்கும், இந்த வழக்கின் பரிகாரத்திற்கும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். நான் வாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு முயற்சி செய்ததால் தான் இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட வந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபட எண்1ல் நீலநிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பகுதி இவ்வழக்கின் வாதிக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபட எண்,1ல் பச்சை நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பகுதி வா.சா.ஆ.6 ஆவணமாக பாகப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 5 வது கண்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், மஞ்சள் நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பகுதியும் எனக்கு உரிமைப்பட்ட பகுதியாகும்.

9. மஞ்சள் நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பகுதி 4 வது கண்டத்திற்கும் 5 வது கண்டத்திற்கும் இடையே உள்ள பகுதி என்றால் 5 வது கண்டத்தில் அமைந்துள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 4 வது கண்டத்தில் இருந்து 87 சதுர லிங்ஸ் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. சிவப்பு நிறகோட்டில் காண்பிக்கப்பட்டுள்ள பகுதி 6 வது கண்டத்தில் இருந்து நான் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

10. வழக்கில் உள்ள வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி வாதிக்கு ஒதுக்கப்பட்ட 13.400 சென்ட் சொத்தில் உரிமை கோருவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் ஆட்சேபனை உள்ளது. என்னுடைய எதிரூரையில் 13.84 சென்ட் தான் வாதிக்கு உண்டு என்பதை காட்டுவதற்காக ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா அல்லது தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை, பாகப்பத்திரம் உள்ளது. வாதிக்கு உரிமைப்பட்ட சொத்தை ஆக்கிரமித்து எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி போதிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.